**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2015 ஆம் ஆண்டு சுதந்திர தின விழா– மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறந்த சேவை புரிந்த நபர்கள்/நிறுவனங்கள்– தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்குதல் – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந. 2.1)த் துறை

அரசாணை (1D) எண்.19

நாள்:12–08–2015
மன்மத, ஆடி 27,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:

1. அரசாணை(1டி) எண்.14, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 21–07–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.2139/ இவாததி–விருதுகள்/2015, நாள் 31.07.2015.

---

**ஆணை:**

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழாவின் போது மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றியதற்காக கீழ்கண்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன:-

1) மாவட்ட ஆட்சித் தலைவர்.
2) மருத்துவர்.
3) வேலை வாய்ப்பளித்த தனியார் நிறுவனம்.
4) அரசு சாராத தொண்டு நிறுவனம்.
5) சேவை புரிந்த சமூகப் பணியாளர்.
6) சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

2. 2015 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்குவதற்கென, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த நபர்கள்/ நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை தேர்வு செய்யும் பொருட்டு 31.7.2015 அன்று தேர்வுக் குழுவின் கூட்டம் முதன்மைச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை அவர்கள் தலைமையில் அவரது அறையில் நடைபெற்றது. தேர்வுக்குழுவின் பரிந்துரைகளை, கூட்டத் தீர்மானத்துடன் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு அனுப்பியுள்ளார். மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்த பின், 2015 ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது பின்வரும் நபர்கள்/நிறுவனங்களுக்கு தமிழக அரசின் மாநில விருதுகளை வழங்க ஆணையிடுகிறது.

(த.பி.பா)

| வ. எண். | மாநில விருதின் பெயர் | மாநில விருது பெற தேர்வு செய்யப்பட்டவர்கள்/நிறுவனம் பெயர் | |
|---|---|---|---|
| 1 | மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 1. | திரு.T.P. ராஜேஷ், இ.ஆ.ப., கிருஷ்ணகிரி. |
| | | 2. | திரு.M. ரவிக்குமார், இ.ஆ.ப., தூத்துக்குடி. |
| | | 3. | டாக்டர் L. சுப்பிரமணியன், இ.ஆ.ப., மதுரை. |
| 2. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர் | டாக்டர் S. சம்பத்குமார், சென்னை. | |
| 3. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த தொண்டு நிறுவனம் | 1. | SCAD- Social Change and Development, Tirunelveli. |
| | | 2. | Adhi Parasakthi Annai Illam, Centre for the Special Children, Kanchipuram. |
| 4. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | திரு. P. சிம்மசந்திரன், சென்னை. | |
| 5. | மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | Flextronics Technologies India Pvt. Limited, Kanchipuram. | |
| 6. | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சேலம். | |

3. மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைகள் புரிந்ததற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு (மாவட்ட ஆட்சியர்கள் தவிர) விருதுகள் 2015 ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும். மேலும், மாவட்ட ஆட்சியருக்கான விருதினை மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வழங்கவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பந்தப்பட்ட நபர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள்நல அலுவலர்( மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, சென்னை.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
பொது(ஜெனரல்–1)த் துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.